
உ

திருஅண்ணாமலை பவழக்குன்றில்

அர்த்தநாரீஸ்வரர்

திருக்கோயில்



33-1

உ

திருவண்ணாமலை பவழக்குன்றில் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்

சிவமும் சக்தியும் ஒன்றே என்ற உண்மையை உணர்த்த வேண்டிச் சிவபிரான் அர்த்தநாரீஸ்வர வடிவம் கொண்டது அண்ணாமலையில் தான் என்ற உண்மையை நூல்களைக் கொண்டும், நேர்முகமாகக் கண்டறியத்தக்க பல ஆதாரங்களைக் கொண்டும் அறியலாம். பவழக்குன்றில் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் அமைந்த புனித வரலாற்றைப் பல ஆதாரங்களுடன் பெரியவர்கள் விளக்கி யிருக்கின்றார்கள் அவற்றைக் காண்போம்.

ஒரு நாள் உமையம்மை சுவாமியை வணங்கி ஐயா! சந்திரரும் சூரியரும் யாவரென்று வினவ அதற்கு சிவபெருமான் அவையே நம்முடைய இருகண்களும் என்று கூறினார். உடனே விளையாட்டாக பார்வதி தேவி சிவபெருமானுடைய இரு கண்களையும் மூட, மூடிய மாத்திரத்தில் அஷ்டதிக்குகளும் பூமியும் இருண்டது. பிரம்ம, விஷ்ணுவும், முனிவர்களும், அஷ்டவசுக்களும் நான்கு வேதங்களும், தேவேந்திரன் முதலான தேவர்களும் கண்களினது பிரகாசமற்று பிறவி குருடர் போலிருந்தார்கள். பசு, காளை முதலிய மிருகங்களும், பறவைகளும் கண்ணொளியற்றன. துறவறம், இல்லறம் இரண்டும் ஒழிந்தன. அனைத்து தொழில்களும் கெட்டன. அதனால் உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் சிவனிடத்தில் சென்று முறையிட்டனர். சிவபெருமான் தன்னுடைய நெற்றிக்கண்ணை திறந்து ஏழுலகமும் அஞ்சத்தக்க அந்த இருளை நீக்கினார்.

உலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளையும் தன்னுடைய வயிற்றில் கருவாக கொண்டிருக்கும் பார்வதி சிவபெருமானிடம் உமது திருக்கண்களை மூடிய கொடிய பாவம் நீங்கும்படி பூவுலகில் தவம் செய்வதற்கு நல்ல இடம் சொல்ல கேட்டார். சிவபெருமான் உடனே உன்னை பாவம் வந்து சேராது. ஆயினும் மற்றவர்களுக்கு பாவம் நீங்கும் பொருட்டு அருந்தவமியற்ற விரும்பியதனால் மதுராபுரி, காசி, அவந்தி, துவாரகாபுரி, அயோத்தி ஆகிய இவைகளிற் சிறந்த காஞ்சிபுரத்திற்கு சென்று தவம் செய்க என்று திருவாய்

மலர்ந்தருளினார். அவ்வாறே அம்மையார் காஞ்சிபுரம் எழுந்தருளினார். அங்கு மாவிருட்சத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரை வணங்கி பின்னர் கம்பை நதிக்கரையில் மணலை குவித்து சிவலிங்க ரூபமாக்கி பார்வதி பூசை செய்தார். இறைவன் தேவியை சோதிக்கும் பொருட்டு கம்பை நதியை பெருக்கெடுக்க செய்தார். உடனே பார்வதி தேவி லிங்கத்திற்கு அபாயம் உண்டாகதவாறு இறுக கட்டிப்பிடித்தார். கம்பை நதியானது அந்த இடத்தில் இரண்டாக பிரிந்து லிங்கத்தை சுற்றிக்கொண்டு சென்றது. சிவபெருமான் அந்த இடத்தில் ரிஷபவாகன சொரூபமாய் தோன்றினார். பார்வதி தேவி வணங்கி துதித்து மகிழ்ந்தார். சிவபெருமான் அவ்விடத்தில் உமக்கு வேண்டிய வரம் யாது என்று கேட்க தேவியும் வேறு எதுவும் வேண்டாம் உமது இடப்பாகத்தை தந்தருள வேண்டினார். பெருமான் எனது கண்களை மூடியதனாலே அடைந்த பாவம் இந்த தலத்தில் நீங்கியது. இந்த தலத்திற்கு தென்பகுதியில் ஒரு நகரம் பிரகாசிக்கும். அதை நினைத்தால் முக்தி உண்டாகும் என்று கூறினார்.

இறைவா! கைலாயம் காசி இவ்விரண்டு தலங்களிலும் இந்த காஞ்சிபுரம் அதிகமென்று அருள்செய்தீர். இந்த க்ஷேத்திரத்தை பார்க்கிலும் அருணாச்சல க்ஷேத்திரம் அதிகம் என்று சொல்லுகிறீர்களே என்று கேட்க, சிவபெருமான் தமக்கு சமமான தெய்வமும் சைவத்திற்கு சரியான சமயமும், பொல்லாத பாவங்களை தீர்க்கும் அருணாசலத்திற்கு சரியான தலமும் உலகத்திலில்லை என்று திருவாய் மலர்ந்தருளினார். உமையவள் உடனே அருணாசல தலத்தினை நோக்கி புறப்பட்டார்.

இடப்பாகம் தருதற்குத் தகுதியான இடம் அண்ணாமலைதான் என்று சிவபிரான் கூறியதற்குக் காரணமாக அருளாளர்கள் கூறும் காரணமாவன:- படைப்புக் காலத்திலே அயன், அரி ஆகியோர்க்கு உண்மையை உணர்த்த வேண்டி, உருவமற்ற இறைவன், மேலேயுள்ள அண்டங்களையும் கீழேயுள்ள அண்டங்களையும் கடந்து அருட்பெருஞ்சோதிப்பிழம்பைப் பிளந்து கொண்டு, உருவமற்ற இறைவன் உருவங்கொண்டு தோன்றினார். முதன் முதல் இறைவன் உருவங்கொண்டு தோன்றிய இடம்

அண்ணாமலை. ஆகவே, சிவமும் சத்தியும் இணைந்து காணப்படும். புதுமையான அர்த்தநாரீஸ்வர வடிவமும் அண்ணாமலையில் தான் தோற்றமாக வேண்டும் என்பது சிவபெருமானுடைய திருவுள்ளமாகும். ஆகவே, அண்ணாமலையில் இடப்பாகம் தருவோம் என்று சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினார்

மேலேயுள்ள செய்திகள் அனைத்தும் உண்மை என்பதனைப் பரத கண்டத்தில் தோன்றிய மிகப் பழமையான நூல்கள் அனைத்தும் விளக்கமாகக் கூறுகின்றன. ரிக் வேதம், பாஸ்கர சம்ஹிதை, சரப உபநிடதம், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதம் ஆகியவை வலியுறுத்துகின்றன. ஆக்வே, அண்ணாமலை தான் இடப்பாகம் தருதற்குத் தகுதியான இடம் என்று திருவுளங்கொண்ட சிவபிரான் உமையே! திருவண்ணாமலைக்கு வந்தால் இடப்பாகம் தருவோம் என்றார்.

இனி, உமையம்மையார் இடப்பாகம் பெற, இறைவன் கட்டளைப்படி அண்ணாமலையை நாடிவந்த வரலாற்றையும், அண்ணாமலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், அவற்றிற்கு இன்று வரை காணப் பெற்று வரும் தகுதியான ஆதாரங்களையும் நோக்குவோம், உமை அம்மையார் இறைவன் கட்டளைப்படிக் காஞ்சி மாநகரத்தினின்று புறப்பட்டு, ஐங்கரப்பிரான், முருகர், எழுகன்னியர், வயிரவர் சிவகணங்கள் சூழ்ந்து வர, அண்ணாமலையை நோக்கிப் பயணம் செய்தார். இடையே உள்ள வளமான ஒரு வெளியில் தங்கினார். அங்கே அம்மையாரும் உடன் வந்தோரும் தங்குவதற்கு ஏற்றவகையில் குமாரக் கடவுள் வாழை இலைகளைக் கொண்டு ஒரு பந்தல் அமைத்தார். உமையம்மையார் அப்பந்தரின் கீழ்த் தங்கினார். சிவபூசை முதலியன செய்தற்கு புனித நீர் தேவைப்பட்டதனால், முருகப்பிரான் தம் கை வேலைச் செலுத்த, அவ்வேல் மலைகளை ஊடுருவிச் சென்று நீரைக் கொண்டு வந்தது. அந்நீர்ப் பெருக்கு சேயாறு எனப் பெயர் பெற்றது. அந்த வளாகத்தில் சேயாறு இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறது.

அம்மையார் தங்கிய வாழைப்பந்தல் இருந்த இடம் இன்றும் வாழைப்பந்தல் என்ற பெயருடன், ஒரு நல்ல ஊராகவே விளங்கிக்

கொண்டிருக்கிறது. அம்மையார் தங்கிய வாழைப்பந்தலில், உண்ணாமலைத் தாயாரின் பெயரால் ஒரு தேவாலயமே ஏற்படலாயிற்று. அந்த உமையம்மையார் ஆலயம் இன்று வரை பொலிவோடு நித்தியப் பூசையுடன் நின்று நிலவி வருகிறது. உமையம்மையார் இடப் பாகம் பெற அண்ணாமலையை நாடி வந்தார் என்ற உண்மையை அண்ணாமலைக்கும் காஞ்சி மாநகரத்திற்கும் இடையே காணப்படும் வாழைப்பந்தல் என்ற ஊரும், அங்குக் காணப்படும் உண்ணாமலை அம்மன் கோயிலும் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன.

உமையம்மையார் சேயாற்றில் நீராடிச் சிவபூசையை முடித்துக் கொண்டு, பரிவாரங்களுடன் அண்ணாமலையை நோக்கி நடந்தார். அப்போது அருட்ஜோதிப் பிழம்பாக அண்ணாமலை தோற்றம் அளித்தது. அப்போது அனைவரும் அருட் ஜோதி மலையைக் கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி வணங்கினர். பிறகு அண்ணாமலையை அடைந்து, வடக்கு வீதியை வணங்கிக் கிழக்கு வீதிக்குச் சென்று வழிபட்டு, அண்ணாமலையார் கோயிலுக்குட் சென்று மனம் உருகி வழபாடு செய்தனர். பிறகு தலேச்சுரம் என்ற பெயருடன் சிறப்புற்று விளங்கிய மலைச்சாரலை அடைந்தனர்.

அங்கே, பிருகுமுனிவர், கௌதம முனிவர் அவர் மகன் சதானந்தர் முதலிய பல முனிவர்களை உமையம்மையார் கண்டார். முனிவர்கள் அம்மையாரைச் சூழ்ந்து கொண்டு கண்ணீர் மல்க வணங்கி அருள் பெற்றனர். அப்போது அம்மையார், தாம் வந்த நோக்கத்தை விரிவாக விளக்கினார். அப்போது கௌதம முனிவர், அம்மையே! இந்த மலைச்சாரலில் படைப்புக் காலம் முதற் கொண்டு, அயன் அரி முதலானவர்களும், எண்ணிலாத முனிவர்களும் அருந்தவம் செய்து பெரும் பேறுகளைப் பெற்றனர். ஆகவே தேவரீரும் சிவபிரானை நோக்கி அருந்தவம் இயற்றி இடப்பாகம் பெறுதற்குரிய இடம் இம் மலைச்சாரலேயாகும் என்றார். அதனைக் கேட்ட அம்மையார், யானும் அவ்வாறே செய்வேன் என்றார், பிறகு அம்மையார் அனைவர்க்கும் விடை கொடுத்து அனுப்பி விட்டுத் திருமலைக்குக் கிழக்கே கௌதமர் தவக்குடிலுக்குப் பக்கத்தில்

(தற்பொழுதுள்ள பவழக்குன்றில்) தவச்சாலை கௌதம மஹரிஷியாலேயே அமைத்துக் கொடுக்கப்பட்டு சப்தமாதர்கள், வயிரவர்கள் புறத்தே காவல் செய்ய, துர்க்கா தேவியார் உட்புறத்தே காவல் செய்யத் தவத்தை மேற் கொண்டார் உமையம்மையார், கூந்தலைச் சடை செய்து, உருத்திராக்க மாலைகளை அணிந்து, திருநீறணிந்து, நெருப்பிற் காய்ந்து ஒளி வீசும் ஊசியில் ஒருகால் விரலை ஊன்றிப் பரமசிவனாரை நோக்கி அருந்தவம் புரிவாரானார். இந்த நிகழ்ச்சி இத்தலத்தில் நிகழ்ந்ததற்கு அடையாளமாக தவச்சாலையை அடுத்தோரிடத்தில் ஊசிக்கம்பம் ஒன்று முன்னோர்களால் அமைக்கப் பெற்றது.

அம்மையார் கடுமையான தவத்தினை மேற்கொண்ட பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகள் உமையம்மையார் திருவண்ணா மலையில்தான் தவம் செய்தார், பவழக்குன்றிற்கு நேரில் வந்தபோதுதான் சிவபிரான் காட்சியளித்தார், அங்கிருந்துதான் இடப்பாகம் பெற்றார் என்ற உண்மையை அழுத்தமாக வலியுறுத்தும்.

அம்மையார் அருந்தவம் இயற்றிக் கொண்டிருந்த போது, மகிடாசுரன் என்பவன் கடுந்தவம் செய்து பெரிய வரங்களைப் பெற்றுத், தேவர்களுக்கும் பிறர்க்கும் சொல்லொன்னா தீங்குகளைச் செய்து கொண்டிருந்தான். அவற்றைத் தாங்க முடியாத நிலையில், அவர்கள் அனைவரும் வந்து உமையம்மையாரிடம் முறையிட்டுக் கண்ணீர் வடித்தனர். கருணையே வடிவாக விளங்கிய உமையம்மையார், துர்க்கா தேவியைக் கூப்பிட்டு, நீ உடனே சென்று, போர்க்களத்தில் மகிடாசுரனைக் கொன்று வருக! என்று ஆணையிட்டார். அதற்குத் துர்க்கா தேவியும் இசைந்தார். அருணை நாயகியும் துர்க்கா தேவிக்குத் துணையாகச் சென்றார். பின்னர் துர்க்கா தேவியாரின் படைக்கும், மகிடாசுரன் படைக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அசுரர்கள் பல்வேறு வகையான வடிவங்களைக் கொண்டு, பல்வேறு வகையாகப் போரிட்டுத் துர்க்காதேவியின் படைக்குப் பெருந்தீங்குகளைச் செய்தனர். அப்போது உமையம்மையார் துர்க்காதேவியை நோக்கி, நீ அசுரனை நேரில் சந்தித்து, உன் கை வாளினால் மகிடாசுரனைக் கொன்று வருக! என்று கட்டளையிட்டார்.

உடனே, துர்க்கா தேவி பரிவாரங்களுடன் சிங்க வாகனத்தின் மேல் ஏறிப் புறப்பட்டார். பல்வேறு வகையாகக் கடுமையான போர் நடைபெற்றது. இறுதியாக மகிடாசுரன், எருமை மாட்டு முகத்துடன் வந்து மோதினான். அவன் எருமைக்கடாவாக வந்து மோதிய இடம், கடாமுட்டி என்ற பெயருடன் இன்றும் காணப்படுகிறது அந்த இடம் வேட்டவலம் சாலையில் உள்ள இரயில்வேகேட்டுக்குத் தெற்கில் இரயில் பாதைக்கும் மேற்கில் உள்ளது. அந்த இடத்திற்கும் தெற்கில் வென்ற மலை என்ற இடம் இருக்கிறது. அமலை என்றால் போர், வென்றமலை என்றால் போரில் வெற்றி பெற்ற இடம் என்பது பொருளாகும். அந்த இடத்திற்கு மேற்கே சாமுண்டி என்ற ஊர் இருக்கிறது. அந்த இடந்தான் துர்க்கா தேவி வெற்றி மாலை சூடிச் சாமுண்டீஸ்வரியாக நின்ற இடம். ஆகவே இத்துணை ஆதாரங்களும், உமைஅம்மையார் இடப்பாகம் பெறத்தவம் செய்து கொண்டிருந்தபோது திருவண்ணாமலையில்தான் இந்தப் போர் நடைபெற்றது என்பதை வலியுறுத்தும். தவம் செய்து கொண்டிருந்த உமாதேவியார் கட்டளைப் படித்தான் துர்க்கா தேவியார் போரிட்டார். ஆகவே, உமாதேவியார் இடப்பாகம் பெறத் திருவண்ணாமலையில் தான் தவம் செய்தார் என்பது தெளிவாகிறது. உமாதேவிக்குப் பெருங்காவல் தெய்வமாக இருந்த, துர்க்காதேவியின் திருக்கோயில் உமை தவம் செய்த இடத்தை அடுத்து, இன்றும் காணப்படுகிறது. துர்க்காதேவிக்குத் துணையாக இருந்த அருணநாயகியின் கோயில் இன்று மிகச் சிறப்பாக (நகரில் திருநீலகண்டர் வீதியில்) காணப்படுகிறது. உமையம்மையார் அண்ணாமலைக்கு வந்தபோது, கௌதமருடைய தவச்சாலை மலைக்குக் கிழக்குப் பக்கத்தில் பவழக்குன்றை அடுத்திருந்தது. இதற்குரிய குறிப்பு அருணாசலப் புராணத்தில் காணப்படுகிறது.

பிறகு உமைஅம்மையார் தவத்தை நிறைவு செய்து கொண்டு அண்ணாமலைப் பெருமான் திருக்கோயிலுக்குட் புகுந்து, பெருமானைக் காதலாகிக் கண்ணீர் மல்க வணங்கினார். பிறகு, கார்த்திகை மாதத்தில் அண்ணாமலைப் பெருமானுக்குப் பெரு விழா நிகழ்த்தினார். அப்போது மலையுச்சியிலே ஒரு ஒளி தோன்றிற்று.

அவ்வொளி யினிடமாகச் சிவபிரான் தோன்றி, பெண்ணே நீ இந்த மலையை வலமாக வருக என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். இடப்பாகம் பெறத் திருவண்ணாமலைக்கு வந்த உமையம்மையார் தொடங்கி வைத்த கார்த்திகைப் பெருவிழா இன்று வரை சிறப்பாக, மங்காமலும் மறையாமலும் நடைபெற்று வருகிறது. சிவபிரான் திருவாய் மலர்ந்தபடியே அம்மையார் மலைவலம் செய்யத் தொடங்கினார் மேற்றிசையில் வரும்போது சிவபிரான் இடபத்தின் மேலிருந்து காட்சி தந்தருளினார். பின்னர் கிழக்குத் திசையில் வந்து வணங்கி நின்றார். அப்போது சிவபிரான் வெள்ளை எருதின் மேல் அமர்ந்து, காட்சி கொடுத்தருளினார். அம்மையார் ஆனந்தக் கடலில் மூழ்கி வணங்கி நின்றார். சிவபிரான் உமையம்மையை நோக்கி, உமையே நீ என்றும் நான் என்றும் வேறான இரண்டு பொருள்கள் இல்லை, மரமும் அதனுள்ளே இருக்கும் வயிரமும் போல ஒன்றாய்ச் சேர்ந்திருப்போம். பெண்ணே! நீ நம்முடைய இடப் பாகத்தில் சேர்ந்திருக என்று மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டார்.

அப்போது ஈருடலும் உருகி ஒருடல் ஆனார்கள். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். கீழ்த் திசையில் உமையம்மை இடப்பாகம் பெற்ற இடத்திற்கு நேராக இருந்த குன்றில் அம்மை இடப்பாகம் பெற்ற கோலத்தை அர்த்த நாரீஸ்வரத் திருவுரு வைத்து அருளாளர்கள் வழிபடலாயினர். இம்முறையில்தான், அர்த்த நாரீஸ்வரர் திருக் கோயில் பவழக் குன்றில் தோன்றிற்று.

மேலும், அனைவர் உள்ளத்தையும் உருக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி, தீபத் திருநாள் அன்று மாலையில் நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சி, உமாதேவியார் தி.மலையில் தான் இடப்பாகம் பெற்றார் என்ற உண்மையை வலியுறுத்துவதாக இருக்கிறது உமை அம்மையார் கார்த்திகை மாதத்தில் அண்ணாமலையார்க்குத் திருவிழா நிகழ்த்தினார் அன்று தான் சிவபிரான் இடப்பாகம் தந்தார். அதனை நினைவுறுத்த வேண்டியே, இன்றும் தீபத் திருநாள் அன்று காலையில் சுவாமி சந்நிதியில் சிவஜோதியை உணர்த்தும் திருவிளக்கும், அம்மன் சந்நிதியில் சத்திச்சுடரும் மடக்குகளில் ஏற்றப்படுகின்றன. அத் தீபங்களுக்குப் பரணி தீபம் என்று திருப்பேர்

சூட்டியுள்ளனர். மாலையில் ஆறு மணிக்கு அந்தத் தீபங்களை கொடிக் கம்பத்தின் முன் கொண்டு அங்குள்ள அகண்டத்தில் ஒன்று சேர்க்கின்றனர். இந்த நிகழ்ச்சி அப்பனும், அம்மையும் இணைந்து அர்த்தநாரீஸ்வர வடிவம் கொள்வதை உணர்த்துகிறது. இந்த நிகழ்ச்சிக்கு இது தான் பொருள் என்பதை உணர்த்தத் திருக்கோயிலுக்குள் இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் அந்த இடத்திற்கு வந்து, அனைவர்க்கும் காட்சி கொடுத்து உடனே திரும்பி விடும். இது நடைபெறுவது, உமையம்மையார், கார்த்திகை மாதத்தில் திருவிழாச் செய்து இடப்பாகம் பெற்றதை உணர்த்துவதற்காகவே பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

ஆகவே, அண்ணாமலையில் தான் அம்மை இடப்பாகம் பெற்றார் என்ற உண்மை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையாகும். அன்று ஏற்பட்ட திருக்கோயில் தான், பவழக்குன்றில் காணப்படும் அர்த்தநாரீஸ்வர் திருக்கோயில்.

"அரிதரு கண்ணியாளை யொருபாகமாக அருள்காரணத்தில் வருவார்" (தேவாரம் 4-73)

"ஆயிழைக்கொரு கூறுப்பட்ட மேனியான்" (தேவாரம் 236-9)

"அன்பிற் பிரியாதவ ளோடும் உடனாய் இன்புற்றிருந்தான்" (தேவாரம் 32-6)

"உமைசேர் திருமேனியினான்" (தேவாரம் 318-7)

"கலவமா மயிலாள் ஓர்பங்கன்" (தேவாரம் 188-7)

"தையல் பாகம் மகிழ்ந்தார்" (தேவாரம் 26-7)

"பெண்ணில்லாளொரு பாகமமர்ந்து" (தேவாரம் 39-11)

"மாமலையான் தன் மடந்தை தோளாகம் பாகமாய்ப் புல்கினான" (தேவாரம் 178-3)

என்று பலவாறு புகழ்ந்து பாடும் தேவாரம்

இந்த அர்த்தநாரீஸ்வரர் வடிவை, மாணிக்கவாசகர்

"தோலுந் துகிலுந் குழையங் சுருள்தோடும்
பால்வெள்ளை நீரும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையமும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"
எனும் பாட்டில் படம்பிடித்து காட்டுகின்றார்.

வாழ்க வையகம் ! வளர்க உண்மை நெறி !!
மாதொரு பாகன் மலரடி வாழ்க!!!

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தின் கீழ்வரும் மிகச்சிறப்பு வாய்ந்த அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் வளர்ச்சிக்கும் பராமரிப்புக்கும் எந்தவித பொருளுதவியோ பணஉதவியோ அளிக்க விழைந்திடும் சேவார்த்திகள் யாவரும் நிர்வாக அதிகாரி, அ/மி அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் பவழகுன்று (அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் வளாக மாடியில்) திருஅண்ணாமலை என்ற முகவரியில் நேரிடையாக அணுகி தாங்கள் அளித்தடும் உதவிக்கு ரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிர்வாக அதிகாரி
அ/மி அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்
பவழகுன்று
திருஅண்ணாமலை.

அனுமதி பெறப்பட்ட விளம்பரம்.

இலவச வெளியீடு